நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம்,
எம்ஆர்சி நகர்,
சென்னை–28

**ந.க.எண். 31917/2019/ டிபி3** **நாள் 01.10.2020**

**சுற்றறிக்கை**

பொருள்: தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 – உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கல் – கட்டிட உரிம காலம் மற்றும் கட்டண விகிதங்கள் குறித்த தெளிவுரைகள் வெளியிடுதல் – சம்பந்தமாக

பார்வை 1. அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019.
2. தமிழ்நாடு அரசிதழ் எண் 43, பகுதி III பிரிவு 1(a), நாள் 04.02.2019.
3. இவ்வலுவலக சுற்றறிக்கை எண் 31159/2018/டிபி3 நாள் 05.03.2019 .

------

பார்வை 1 ல் காணும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன் விதி எண் 14(1) மற்றும்(2)ல் குறிப்பிட்டவாறு கட்டிட அல்லது திட்டஅனுமதி காலம் ஐந்து ஆண்டுகளுக்கு செல்லபடியாகும் வகையிலும், தேவையான நேர்வுகளில் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் ஒருமுறை உரிய கட்டணங்களை வசூலித்துக் கொண்டு காலநீட்டிப்பு செய்து கொள்ள வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது.

பார்வை 3ல் காணும் இவ்வலுவலக சுற்றறிக்கையில் மாமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டிட உரிமக் கட்டணத்தை ஒரு முறை செலுத்தினால், 5 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் வகையிலும், காலநீட்டிப்பு தேவைப்பட்டால் மாமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டிட உரிமக் கட்டணத்தைச் செலுத்தினால், மேலும் 3 ஆண்டுகளுக்கு உரிம காலநீட்டிப்பு வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே கட்டண விகிதங்களை ஓராண்டிற்கு நிர்ணயம் செய்து அதன் மடங்குகளில் ஐந்து ஆண்டுகளுக்கு கணக்கீடு செய்வதை தவிர்த்து மாமன்றத்தால் கட்டிட அனுமதிக்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை ஒரு முறை செலுத்தினால், ஐந்து ஆண்டுகளுக்கும் செல்லத்தக்க வகையில் உரிமம் வழங்கும் முறையை நடைமுறைப்படுத்திட அனைத்து நகராட்சி / மாநகராட்சி ஆணையர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**நகராட்சி நிர்வாக ஆணையர்**

**பெறுநர்**
அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்கள்

**நகல்**
1. அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
2. இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை 102.